[21st March 1964

பஸ்களுக்கு அனுமதிக்கப்படும் "மாறுதல்கள்"

* 353 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களுக்கு வேரியேஷன் எத்தனை மைல் வரை கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : According to section 48 of the Motor Vehicles Act, 1939, as amended by the Motor Vehicles (Madras Amendment) Act, 1964, the distance that can be covered by the variation of a route is restricted to 24 kilometres.

1964–ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (சென்னை திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, 1939–ம் ஆண்டு மோட்டார் வண்டிகள்சட்டத்தின் 48–வது பிரிவின்படி, ஒரு ரூட்டில் 24 கிலோ மீட்டர் வரையிலுமே வேரியேஷன் செய்யலாம்.

திரு. ம. கமலநாதன் : 24 கிலோ மீட்டருக்கு அதிகப்படியாக வேரியேஷன் கொடுக்கமுடியாது என்று இருக்கும்போது அரசாங்கம் தலையிட்டு சுமார் 50 கிலோ மீட்டருக்கு ஏதாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா ? காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி தகவல் என்னிடமில்லை. தனிக்கேள்விபோட்டால் பார்த்துச் சொல்லுகிறேன். எழுதினாலும் கவனித்து சொல்ல முடியும்.

திரு. ஆ. தங்கவேலு : இந்த வேரியேஷன் கொடுப்பதில் அநேக இடங்களில் இரண்டு ஆண்டுகளாக வேரியேஷன் கொடுத்து டெம்பரரியாக ஓடிக்கொண்டிருப்பதை, அது எப்போது பக்கா பெர்மிட்டாகக் கொடுக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மோட்டார் வெகிக்கிள்ஸ் சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதையெல்லாம் எடுத்துத்தான் இந்த வேரியேஷன் கொடுக்கமுடியும். அதற்கு ஆர். டி. ஏ. இப்போது சட்டத்தை திருத்திவிட்டதால் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. ம. கமலநாதன் : தேர்தலின் போது சுமார் 200 வேரியேஷன் அரசாங்கம் கொடுத்துவிட்டு தேர்தலுக்குப் பிறகு அவையெல்லாம் ரத்து செய்யப்பட்டது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம் ரூல்ஸ் ஆப் ப்ரொஸீஜரில் ஒரு விதியிருக்கிறது. அங்கத்தினர் அதைக் கவனிக்காமல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்ஸினிவேஷன் செய்யக்கூடாது என்று இருக்கிறது. இந்தக் கேள்வியின் அர்த்தம், தேர்தலுக்காக வேரியேஷன் கொடுத்ததாகவும் பின்னால் நிறுத்திவைத்ததாகவும்—அப்படி ஒன்றுமில்லை. முதலில் வேரியேஷன் கொடுக்கலாம் என்று சட்டம் இருந்தது. அந்தச் சட்டப்படி வேரியேஷனுக்கு அனுமதி கொடுத்திருந்தோம். ஹைக் கோர்ட், வேரியேஷன் கொடுக்க அதிகாரம் இல்லை என்று தீர்மானம் செய்தார்கள். எல்லாம் ரத்தாகி விட்டது.

பஸ் ரூட்டுகள் (தற்காலிக விஸ்தரிப்பு)

* 354 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஸ் ரூட்டுகளைத் தற்காலிகமாக விஸ்தரிப்பதற்குச் சர்க்காருக்கு அதிகாரமில்லை என்று சமீபத்தில் ஹைக்கோர்ட்டு தீர்ப்புக்கொடுத்துள்ளதா ?